செ. கு. எண்:085 நாள் :15.05.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 15.5.2014

சென்னை பெருநகரக் காவல், கிண்டி போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. I.கதிர்வேல் அவர்கள் 25.2.2014 அன்று கிழக்கு கடற்கரை சாலையில் காரில் பயணம் செய்து கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், அயனாவரம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. G.பிரபாகரன் அவர்கள் 25.2.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்ட சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.ராஜன் அவர்கள் 2.3.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.மனோகரன் அவர்கள் 8.10.2013 அன்று கோபி – சித்தோடு சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 3.3.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், இலத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.இசக்கி அவர்கள் 3.3.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், ராமநத்தம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.செல்வநாதன் அவர்கள் 5.3.2014 அன்று ஏற்பட்ட மாரடைப்பால் மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், ரெட்டிச்சாவடி காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திருமதி K.கல்பனா அவர்கள் 4.3.2014 அன்று அங்காலன்குப்பம் கிராம கோவில் திருவிழா பாதுகாப்பு பணிக்கு தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 6.3.2014 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், தேவாரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. T.மதிவாணன் அவர்கள் 7.3.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம் நேசமணி நகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு S. முருகன் அவர்கள் 9.3.2014 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 10.3.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கதிர்வேல், ராஜன், மனோகரன், இசக்கி, செல்வநாதன், முருகன்; தலைமைக் காவலர் மதிவாணன்; முதல் நிலைக் காவலர் பிரபாகரன்; காவலர் கல்பனா ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9